අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்லை, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref. ED/01/21/08/04/2022 ඔබේ අංකය / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2022.10. 31

சுற்றுநிரூப எண்: 35/2022

அனைத்து மாகாணக் கல்வி செயலாளர்கள்,
அனைத்து மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து பிரிவெனா அதிபர்கள்,
அனைத்து அரச பாடசாலை அதிபர்கள்,
அனைத்து தனியார் பாடசாலை அதிபர்கள்,
அனைத்து அரச உதவி பெறும் பாடசாலை அதிபர்கள்
அனைத்து சர்வதேச பாடசாலை அதிபர்கள்

**"சுரகஷா" மாணவர் காப்புறுதி**

.2021.12.02 ஆம் திகதி முதல் இந்த சுற்றிக்கை செயல்படுவதுடன் அதன் பிரகாரம் "சுரக்ஷா" மாணவர் காப்புறுதிக்குரியவாறு வெளியடப்பட்ட கல்வி அமைச்சின் இலக்கம் 04/2021 ஆம் சுற்றறிக்கை அத்திகதி முதல் ரத்துச் செய்யப்படும்.

02, "நிதமும் காப்போம் - நாட்டின் குழந்தைகளை" எனும் தலைப்பில் செயற்படுத்தப்படும் "சுரக்ஷா" மாணவர் காப்புறுதி குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டு 2017 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு முன்மொழிவிற்கு அமைவாக அரசினால் அறிமுகம் செய்யப்பட்டு தொடர்ந்து மேற்கொள்ளப்படும் ஒரு வேலைத்திட்டமாகும்.

03. அறிவு மற்றும் திறனில் முழுமைப்பெற்ற பிள்ளைகளை சமூகமயப்படுத்துவது கல்வி அமைச்சின் முக்கிய குறிக்கோளாகும். எல்லா வயதினருக்கும் பாதுகாப்பான சூழல் இருப்பது அத்தியாவசிய காரணியாகும். ஆதலால் மாணவச் செல்வங்களின் உடல் மற்றும் உள சமூகநிலை நன்நிலவுகைக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்திருப்பதுடன் பாடசாலையினுள்ளும் அதற்கு வெளியிலும் ஏற்படும் நோய்கள், விபத்துக்கள் மற்றும் குறைபாடுகளுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கையாக மாணவர் சுகாதார காப்புறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. .

04. நோய், விபத்து மற்றும் உபாதைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களின் போது அவசர சுகாதார சேவைக்கு உட்படுத்தி பிள்ளைகளின் நலனை சீக்கிரமாக உறுதி செய்வதினூடாக தினமும் பாடசாலை வருகையை அதிகரித்தல்,கடுமையான உபதைகளுக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்களில் தேவையான சிகிச்சைகளுக்கு உதவி புரிதல்,13 வருட தொடர்ச்சியான பாடசாலை கல்விக்கான பங்களிப்பை அதிகரித்தல்,போன்ற நோக்கங்களின் அடிப்படையில் "சுரக்ஷா"மாணவர் பாதுகாப்பு அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன்,அதன் மூலமாக இலங்கையில் அனைத்து பாடசாலை மாணவர்கள் மற்றும் பிரிவெனா மாணவர்கள் தழுவப்படுவார்கள்.அதாவது அனைத்து அரச பாடசாலைகள், உதவிபெறும் அல்லது பெறாத தனியார் பாடசாலைகள், பிரிவெனா மற்றும் சர்வதேச பாடசாலைகள் போன்ற கல்வி நிறுவனங்களில கல்வி கற்கும் 4 வயதிற்கும் 21 வயதிற்கும் இடைப்பட்ட வயதெல்லை உடைய மாணவர்களும் உள்ளடங்களாக் அனைத்து இலங்கை மாணவர்களும் இக்காப்புறுதியில் பயனாளிகளாவார்கள்.

05 2021 டிசம்பர் 02 ஆம் திகதி முதல 2022 டிசம்பர் 01 வரையிலான காலப்பகுதி தொடர்பாக கல்வி அமைச்சுடன் ஒப்பந்தம் செய்துமுக்கொண்ட இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலத்திற்குள்நாள் ஒன்றுக்கு 24 மணிநேரமும்தழுவுமாறு காப்புறுதி வழங்கப்படும்.

காப்புறுதி வசதிகள் பின்வருமாறு அமைகின்றன

**i. சுகாதாரக் காப்பீடு**

- வதிவிட வைத்தியசிகிச்சைகளுக்காக ரூ.200,000 (அரச/தனியார்)
- வெளி சிகிச்சைகளுக்காக ரூ.10,000 (ஆலோசனை படிவத்தில் இரண்டாம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நன்மைகள்) ரூ.200,000/= முதல் ரூ.1,500,000/= வரையில்

**ii விபத்துக் காப்பீடு**

- முழுமையான நிரந்தரமான உடல் ஊனத்துக்காக ரூ.200,000
- நிரந்தர அறை குறையான பாதிப்புகள ரூ. 150,000 தொடக்கம் ரூ.200,000 வரை
- தற்காலிகமான ஊனத்துக்காக ரூ.25,000/= முதல் ரூ.1000,000/= வரை

**iii ஆயுட்காப்புறுதி**

குறைந்த வருமானம் உள்ள குடும்ப மாணவர்களின் பெற்றோர்/சட்டபூர்வ பாதுகாவலர்ஆகியோரின் இறப்பின்போது மாணவர் ஒருவர் தொடர்பாக ரூ.75,000.'ஸ்ரீ வீதம் வழங்கப்படும். ஒரு இறப்பிற்காக ஒதுக்கப்படும் அதிகபட்ச தொகை ரூ.225,000.'ஸ்ரீ என்பதுடன் குடும்பத்தில் அனைத்து மாணவர்களுக்கிடையில் அந்தத் தொகை சமமாக ஒதுக்கப்படும். பெறட்றோர்களின் இறப்பின்போது வெவ்வேறாக இந்த காப்புறுதி உரித்தாகும்.

06 மேற்படி நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காக "சுரக்ஷா" காப்பீட்டுத்திட்டத்தின் பயனாளி என்பதை உறுதிப்படுத்துவதற்காக உரிமைக் கோரும் விண்ணப்பப் படிவத்தில் (இணைப்பு 01) அதிபரினால் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தல் கட்டாயமாகும்.

07 இக்காப்பீட்டுத்திட்டத்தின் அனைத்து விடயங்களும் மற்றும் ஒவ்வொரு கல்வி நிறுவகங்களுக்குரிய பணிகள் ஆலோசனைக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

08. கல்வி அமைச்சு மற்றும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் மூலமாக அறிமுகப்படுத்தப்படும் "சுரக்ஷா" மாணவர் காப்புறுதிக்குரிய நன்மைகள் நிபந்தனைகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் முறையாக சமூகத்தை அறிவுறுத்துவதற்கு கல்வி அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

09 ஆரோக்கியமான மாணவர் பரம்பரையொன்றை நாட்டுக்கு உரித்தாக்கவும், கிடைக்கப் பெற்றுள்ள கல்வி வாய்ப்புகளிலிருந்து உச்சப் பயனை பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், மாணவர் காப்பீட்டின் உச்ச நன்மைகளை மாணவர்களுக்கு உரித்தாக்குவதற்காகவும் அனைத்து தரப்பினரும் அதிகபட்ச பங்களிப்பை வழங்குவதற்கு செயல்புரிவார்கள் என எதிர்பார்க்கின்றேன்

எம்.என். ரணசிங்க
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதி

1. ஜனாதிபதி செயலாளர — தயவுடன் அறிந்து கொள்வதற்காக்
2. பிரதமரின் செயலாளர், — தயவுடன் அறிந்து கொள்வதற்காக்
3. கணக்காய்வாளர் நாயகம் - கணக்காய்வுத் திணைக்களம — தயவுடன் அறிந்து கொள்வதற்காக்
4. செயலாளர், நிதி அமைச்சு — தயவுடன் அறிந்து கொள்வதற்காக்
5. செயலாளர், சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு — தயவுடன் அறிந்து கொள்வதற்காக்
6. சகல மாகாண பிரதம செயலாளரகள் — தயவுடன் அறிந்து கொள்வதற்காக்

## ஆலோசனைக் கோவை

### 1வது அத்தியாயம்- சுரக்ஷா மாணவர் காப்பீடு

காப்பீடு, காப்பீட்டுநிறுவனம், பயனாளிகள், பயனாளியாக தகுதி பெறுதல்,“சுரக்ஷா மாணவர் அட்டையைப் பெற்றுக் கொள்ளல் பற்றிய விபரங்கள் இவ்வத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**1.1 காப்பீடுமுறை**

கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்படும் காப்பீடு “சுரக்ஷா” மாணவர் காப்பீடு எனப்படும். 2021 டிசம்பர் 02 ஆம் திகதி முதல் 2022 டிசம்பர் 01 ஆம் திகதி வரையிலானகாலத்திற்காக கல்வி அமைச்சுடன் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ள இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் இந்த சுரக்ஷா காப்புறுதி வழங்கப்படும்.

**1.2 பயனாளிகள்**

அனைத்துஅரச பாடசாலைகள், உதவிபெறும் தனியார் பாடசாலைகள், உதவி பெறாத தனியார் பாடசாலைகள்,பிரிவெனாக்கள்,மற்றும் சர்வதேச பாடசாலைகள் போன்ற பொதுவான கல்வி நிறுவகங்களில் பதிவைப் பெற்று கல்வி செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள 1 முதல் 13 ஆம் தரங்களின் 5-21 வயதெல்லையுடைய மாணவர்களும், உதவிபெறும் விசேட பாடசாலைகள் மற்றும் விசேட கல்வி அலகுகளில் கல்வி பயிலும் 4-21 இடையிலான வயதெல்லையைக் கொண்ட மாணவர்களும் உள்ளடங்களாக அனைத்து இலங்கை சார்ந்த மாணவர்கள பயனாளிகளாவார்கள். பாடசாலையை விட்டு விலகிச்செல்லும் மாணவர்கள் பயனாளிகளாக கருதப்பட மாட்டார்கள்.

இந்த சுற்றுநிருபம் மற்றும் ஆலோசனைக் கோவையில் அரச பாடசாலைகள், உதவிபெறும் தனியார் பாடசாலைகள், உதவி பெறாத தனியார் பாடசாலைகள், உதவியல் பாடசாலைகள், சர்வதேச பாடசாலைகள் மற்றும் பாடசாலைகளின் விசேட அலகுகள் **“பாடசாலைகள்”**என பொருள்படுகின்றது. துறைசாரா-மதகுரு மாணவ மாணவிகள் **“மாணவர்கள்”**எனப் பொருள்படும்.

### 2வது அத்தியாயம்- காப்பீடு சந்தர்ப்பங்களும் நன்மைகளும்

சுகாதார நன்மைகள், விபத்து நன்மைகள்மரணம் ஆகியவை தொடர்பான நன்மைகள், விஷேட நன்மைகளுக்கான சந்தர்ப்பங்கள்,மற்றும் நிதி தொடர்பான விடயங்கள் இவ்வத்தியாயத்தில் குறிப்பிடப்படுகின்றன..

**2.1 சுகாதார நன்மைகள் (செலவுகளை மீளப்பெறுதல் மட்டுமே)**

**2.1.1 வதிவிட சிகிச்சைக்குரிய நன்மைகள் ரூ.200,000**

**சகல உரிமங்கள் வருடத்திற்குரிய தொகைக்குட்பட்டு செலுத்தப்படும்**
(அரச வைத்தியசாலை் கட்டண வாட்டில், தனியார் வைத்தியசாலை, மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் வைத்தியசாளைகளுக்காக)

- வதிவிட சிகிச்சை மற்றும் மருந்துகளுக்கான செலவுகள் (அரச வைத்தியசாலை் கட்டண வாட்டில், தனியார் வைத்தியசாலை, தனியார் ஆயுர்வேத வைத்தியசாலை சிகிச்சைகள் நாள் ஒன்றுக்கு அதிகபட்ச அறைக்கான கட்டணங்கள் ரூ.12,500/=))
- வைத்தியர் கட்டணம்/விஷேட வைத்திய நிபுணர் கட்டணம்
- சத்திர சிகிச்சை செலவுகள், வைத்திய பரிசோதனைகள், ஔடதங்கள் மற்றும் மருந்துகள், வைத்திய பரிந்துரையின் கீழ் விசேட சிகிச்சைகள்

**அரச வைத்தியசாலைகள் மற்றும் கட்டணம் செலுத்தப்படாத வாட்டுகள் தொடர்பாக**

- அரச வைத்தியசாலை/ தனியார் ஆயுர்வேத வைத்தியசாலை கட்டணம் செலுத்தாத வாட்டு ஒரு இரவுக்காக ரூ.1000/-- நாளாந்த கொடுப்பனவு வைத்தியசாலை அனுமதி தவிர்ந்த, சத்திர சிகிச்சைக்கான செலவுகள் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)
- கடுமையான அல்லது ஆபத்தான நோய்களுக்காக பரிந்துரைக்கப்பட்ட விஷேட துணைப் போஷாக்கு உணவுகளுக்கான செலவுகள், வைத்தியசாலையில் இருந்து வெளியேசிய பின்னர் ஒரு கிழமைக்கான மருந்துகளுக்காக (வெளியேறிய நாள்முதல்) செலுத்தப்படும்

**.குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு மட்டும் பின்வரும் நன்மைகள் உரித்தாகும்**

- வைத்தியரின் சிபாரிசின் அடிப்படையில் வழங்கப்படும சிகிச்சைகள்
- நாட்பட்ட நோய்கள்/சத்திர சிகிச்சைகள்/ விபத்தின்போது பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் பொருட்கள் ஆகியவற்றுக்கான செலவுகள் (TED/Stockings/air mattress/water mattress/rehabilitation Accessories/ special shoes/walking aids/ crutches, etc)
- அவசர விபத்தின் பின்னர் அல்லது அவசர விபத்தினால் ஏற்படும் வடுகளினால் மேற்கொள்ளப்படும் ப்ளாஸ்டிக் சிகிச்சைக்கான செலவுகள்

**2.1.2 வெளி சிகிச்சை நன்மைகள் ரூ.10,000/-**

**மீளப்பெறுவதற்கு மட்டும்**

- வைத்தியசாலையில் அனுமதிக்காமலும் பின்வரும் பரிசோதனைகளுக்கு செலவுகள் மீள்செலுத்தப்படும் (EEG,MRI,CT Scan, DMSA Scan, Ultra Sound Scan)
- பல்நோய்களுக்கான சிகிச்சை – பற்களை அகற்றுவதற்கு மற்றும் நிரப்புவதற்கு மட்டும்
- அவசர விபத்தினால ஏற்படும் நோய்களுக்காக ஆயர்வேத சிகிச்சை முறைகளை பெற்றுக் கொள்தல்) (அரச அங்கீகாரம் பெற்ற ஆயுரவேத வைத்தியசாலைகள்)

கீழ்காணும் நன்மைகளை பெற்றுக்கொள்வது, வைத்திய அதிகாரி ஒருவர் அல்லது சுகாதார வைத்திய அதிகாரி அல்லதுகண் சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவரின் பரிந்துரையின் கீழ் மாத்திரமே (இது மீளப்பெறும் அடிப்படையின் கீழ் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மையாகும். இருப்பினும் குறைந்த வருமானம் பெறுபவர்கள் தொடர்பாக இந்த வசதிகள் நேரடி செலுத்தல் முறையின் கீழ் பெற்றுக்கொள்ள முடியும்.)

- கண், காது, கேட்டல் குறைபாடுகளுக்கான சிகிச்சைகள்
- குறைபாடு சீர் செய்தல் சிகிச்சைகளுக்கு உபகரணங்களை வாங்குதல், சுகாதார வைத்திய அதிகாரியின் ரரிந்துரை அல்லது கண் சத்திர சிகிச்சை வைத்தியரின் அனுமதி தேசைப்படும் (உ.ம். கண்ணாடிகளை பெற்றுக்கொள்ளல், காது கேட்கும் கருவிகளை பெற்றுக்கொள்ளல்)

**2.1.3 கடுமையான நோய்களுக்கான காப்பீடு- ரூ.1,500,000/- வரை**

உள்நாட்டு வைத்தியசாலையொன்றில் சிசிச்சை பெற்றுக்கொள்ளும்போது பற்றுச்சீட்டுச் செலவினை ஈடுசெய்வதினூடாகவோ அல்லது நேரடியாகவோ செலுத்தப்படுவதோடு வெளிநாட்டு வைத்தியசாலை ஆயின் செலவு ஈடுசெய்தல் ஊடாக மாத்திரம் செலுத்தப்படும். சிகிச்சைக்காக வெளிநாடு செல்வது, இலங்கையில் அவ்வாறான சிகிச்சை முறைகள் இல்லாமை மற்றும் உடனடி சிகிச்சை தேவைப்பட்டாலும் பெயர் பட்டியலின்படி காத்திருக்க நேரிடும் சந்தர்ப்பங்கள் ஏற்படும்போது மாத்திரமே.(கடுமையான நோய்களுக்காக நேரடி செலுத்தல்களை பெற்றுக்கொள்ளக்கூடிய அனுமதிக்கப்பட்ட வைத்தியசாலை ஆவணங்கள் இணைப்பு 5 இன் ஊடாக காட்டப்பட்டுள்ளன.)

ஆபத்தான/ கடுமையான நோய்க் காப்பீட்டு சந்தர்ப்பங்கள் பின்வருமாறு அமைகின்றன

- இருதய சத்திரசிகிச்சை (Heart Surgery)
- புற்றுநோய்ச் சிகிச்சை(Cancer Treatment
- சிறுநீரக மாற்று சத்தரசிகிச்சை(Kidney Transplantation)
- இறத்த ஓட்ட சீராக்கல் (Dialysis)
- இடுப்பு, தோல்பட்டை, முழங்கால் எலும்பு பிரதியீடு (Hip, shoulder, knee Replacement)
- மூலைச் சத்திரசிகிச்சை (Brain Surgery)
- முதுகெழுப்பு ஒழுங்கின்மை சீராக்கல் (Scoliosis)
- நரம்பு மாற்று சத்திரசிகிச்சை(Cochlear Implantation)
- முழுகெழுப்பு சுருக்கம் சத்திரசிகிச்சை (Spinal cord compression)
- கல்லீரல் மாற்று சத்திரசிகிச்சை(Liver Transplant)
- கண் சத்திர சிசிச்சை (Eye Surgery)
- கை/கால் கொள்வனவு (Artificial limbs)
- என்பு மச்சை மாற்று சத்திரசிகிச்சை (Bone Marrow Transplantation)
- தெலசீமியா (thalassemia)

**2.2 அவசர விபத்து நன்மைகள்** - ஈடுசெய்தலின் கீழ் (Re-Imbursment Basis)

**முழுமையான மற்றும் நிரந்தர ஊனம் தொடர்பான நன்மைகள்** -( ஒரே நேரத்தில் அல்லது ஒரு வருடத்திற்கான அதிகபட்ச தொகை)

2.2.1 முழுமையான மற்றும் நிரந்தரமான ஊனம் தொடர்பாக - ரூ.200,000/=

- இரு கண்களின் பார்வை இழப்பு ரூ. 200,000/=
- இரண்டு காதுகளிலும் கேட்கும் திறன் இழப்பு ரூ. 200,000/=
- இரண்டு கால்களையும் இழத்தல ரூ. 200,000/=
- ஒரு கண் மற்றும் ஒரு கால் இழப்பு ரூ. 200,000/=
- ஒருகாது மற்றும் ஒரு கால் இழப்பு ரூ. 200,000/=
- ஒரு கண் மற்றும் ஒரு காது இழப்பு ரூ. 200,000/=

2.2.2 முழுமையான மற்றும் அறைகுறை தொடர்பாகரூ. 150,000/-முதல் ரூ.200>000/-

- ஒரு கண் இழப்பு ரூ. 150,000/=
- ஒரு கால் இழப்பு ரூ. 150,000/=
- ஒரு காது இழப்பு ரூ. 150,000/=

2.2.3 தற்காலிக ஊணம் தொடர்பாக ரூ. 25,000/= முதல் ரூ.100,000/=

வீட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கு செல்லும் காலத்தின் படி செலுத்தல்கள் தீர்மானமாகும். இதற்குரிய அரச வைத்தியரின் (ஆயர்வேத சிகிச்சையும் உள்ளடங்கும்) பரிந்துரையுடன் காப்புறுதி நிறுவகத்தினால் கோரப்படும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். சிகிச்சை பெறும் காலம்

- இரண்டு கிழமை முதல் 01 மாதம் வரை ரூ. 25,000/=
- 01 மாதம் முதல் 02 மாதங்கள் வரை ரூ. 50,000/=
- 02 மாதங்களுக்கு மேலான ரூ.100,000/=

**2.3 மரணம்**

இது நன்மைகள் குறைவான வருமானத்துடன் கூடிய குடும்பங்களின் மாணவர்களுக்குமட்டும் உரித்தாகும். அதற்கமைவாக், குடும்பத்தின் வருடாந்த வருமானம் ரூ.180,000/= க்கு மிகையாகாது என்று பிரதேச செயலாளர் ஒப்பமிட்ட கிராம அலுவலரின் சான்றிதழை முன்வைக்க வேண்டும்.

2.3.1 பெற்றோர்/ பாதுகாவலர் மரணிக்கும்போது ஒரு மாணவருக்கான காப்பீட்டுத் தொகைரூ.75,000 ஆகும்.

குறைவான வருமானத்தைக் கொண்ட குடும்பங்களின் மாணவர்களின் பெற்றோர்/பாதுகாவலர்களின் இறப்பின் போது ஒரு மாணவருக்கு ரூ.75,000/= உரித்தாகும். ஒரு இறப்பிற்காக ஒதுக்கப்படும் அதிகபட்ச தொகை ரூ.225,000/=ஆகும் என்பதுடன் குடும்பத்தின் அனைத்து மாணவர்களுக்கிடையில அத்தொகை சமமாக ஒதுக்கப்படுவதுடன், பெற்றோர்களின் இறப்பு தொடர்பாக வெவ்வேறாக இந்த காப்பீடு உரித்தாகும்.

பெற்றோர்/பாதுகாவலர் போன்றோரின் இறப்பில் காப்புறுதி வழங்கப்படுவது மாணவர்களுக்கு மட்டுமே. பாதுகாவலர்களின் அரவணைப்பில் உள்ள ஒரு பிள்ளைக்கு காப்புறுதி வழங்கப்படுவது பாதுகாப்பனை நீதிமன்றத்தின் மூலமாக ஒப்படைக்கப்பட்டிருந்தால் மட்டுமே.

- ஒரு மாணவரின் இறப்பு தொடர்பில் காப்புறுதி வழங்கப்படுவதில்லை

## 3வது அத்தியாயம் - நன்மைகளைப் பெற்றுக் கொள்ளல்

நன்மைகள் உரித்தாகாதிருத்தல், தழுவல் அல்லாத செலவீனங்கள், நன்மைகளைப் பெற்றுக்கொள்ள சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள், நன்மைகள் கிடைக்காத சந்தர்ப்பங்கள், பற்றுச்சீட்டுகள் மீதான மீள் செலுத்துதல் என்பன இவ்வத்தியாயத்தில் விபரிக்கப்படும்.

### 3.1 நன்மைகள் உரித்தாகாதிருத்தல்

அரச சட்டதிட்டங்கள் படி சுகாதார அமைச்சின் கீழ் பதிவுசெய்யப்படாத வைத்தியசாலையொன்றில் அல்லது வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவர்கள் தொடர்பாக இக்காப்புறுதி உரித்தாகுவதில்லை

### 3.2 தழுவல் அல்லாத செலவினங்கள்

கீழ்காணும் செலவினங்கள் தழுவலற்றது என்பதுடன் விசேட கவனத்திற்கு ஆளாகுவதும் முக்கியமாகும்.

3.2.1 தங்கியிருந்து சிகிச்சைகளின்போது தழுவல் அற்ற செலவுகள்

- விமான டிக்கட்டுகள்
- விமான விபத்துகள்
- மசாஜ் சிகிச்சைகள;(spa)
- அவசர விபத்து ஏறபடாத சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்படும் சுன்னத் செய்தல் (circumcision) தொடர்பாக ஏற்படும் செலவினங்கள்.
- சிகிச்சைக்கு அப்பாற்பட்ட செலவுகள் உ.ம். தொலைபேசி செலவு, உணவு, சேவைக்கட்டணங்கள் போன்றவை
- சட்டவிரோத செயல்களின்போது ஏற்படும் விபத்து/ நோய்/அங்கவீனம
- அவசர விபத்து ஏறபடாத சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்படும் மேற்கொள்ளப்படும் ப்ளாஸ்டிக் சத்திரசிகிச்சை/அழகுப்படுத்தும் சிகிச்சை முறைகள் / உடல் பருமனக்கான சிகிச்சைகள
- கருவுற்றல் மற்றும் மகப்பேறு
- ஹோமியோபதி சிகிச்சை
- உடல் உறுப்புகளை வழங்குதல், வைத்தியாசலைகிள்ல நுழைதல்
- தற்றுணிவின் அடிப்படையில் மேற்கொள்ளும் விபத்து/அங்கவீனம் (உதா. தற்கொலை)
- மதுபானப் பாவனை அல்லது வைத்தியரினால் அங்கிகாரம்/ அனுமதி இன்றி மேற்கொள்ளப்படும் சிகிச்சைகள்

- வைத்தியரின் அங்கீகாரம் இன்றி வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறல் அல்லது தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கு அனுமதியில்லாத நோய்களுக்கு சிகிச்சை பெற்றமைக்கான செலவு
- யுத்தம், அக்கிரமிப்பு, சண்டை ஆகிய நிலைமைகளின் போது ஏற்படும் அனர்த்தங்களுக்கான செலவு
- கலகம் விளைவித்தல், ஆர்ப்பாட்டங்களின்போது ஏற்படும் அனர்த்தம்
- அனுமதியின்றி செய்யப்படும் ஆகாய சாகசங்களில் ஏற்படும் அனர்த்தங்கள்

### 3.3. நன்மைகள் பெறுவதற்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

வைத்தியசாலை ஒன்றில் இருந்து வெளியேறிய பின்பு கீழ்காணும் ஆவணங்களின் மூலப்பிரதியை சமர்ப்பிக்க வேண்டும். நோயாளியின் தேவைக்காக நிழற்பிரதிகளை பெற்றுக்கொள்ள வேண்டும். கீழ்காணும் ஆவணங்களை இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திகோ அல்லது அண்மையில் உள்ள இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன கிளைக்கோ பதிவுத்தபாலில் அல்லது ஒப்படைக்க வேண்டும். இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் கிளை ஆவணங்கள் இணைப்பு 06 இல் காட்டப்பட்டுள்ளன உரிமைப் பத்திரம் இணைப்பு 04 இல் காணப்படுகிறது.

| நன்மைளை பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் | சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் |
|---|---|
| • செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டுகளின் மூலப்பிரதிகள் சமர்ப்பிக்க வேண்டியதுடன், வேறு எந்தவொரு ஆவணத்தின் பிரதியை சமர்ப்பிக்கும்போது அவ்ஆவணம் அதிபர்னால் அல்லது இலங்கை காப்றுதி நுட்டுத்தாபனத்தின் எந்தவொரு கிளையின் முகாமையார் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டு, நிரிவாக அதிகார் ஒருவரின் உறுதிப்படுத்தலுடன் சமர்ப்பிக்க வேண்டும்.<br>• குறைந்த வருமானம் உள்ளவர்கள் மட்டும் தமது நன்மைகளை பெற்றுக்கொள்ளும்போது பிரதேச செயலாளரின் துணை கையொப்பத்துடன் குறைந்த வருமானம் உள்ளவர்கள் என உறுதிப்படுத்தும் கிராம அலுவலரின் சான்றிதழை முன்னிலைப்படுத்த வேண்டும்.<br>• நன்மைகளை பெறும் போது உரிய பற்றுச்சீட்டு/ இறப்பின் பின்னர் 90 நாட்களுக்குள் உரிமைப்பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும். எனினும் காப்புறுதி நிறைவுபெறும் 2022.12.01 ஆம் திகதி தொடக்கம் 60 நாட்களுக்குள் சகல காப்பீட்டு உரிமைப்பத்திரங்களை சமர்ப்பிக்க வேண்டும். அதன் பிரகாரம் காப்புறுதி உரிமங்களை பொறுப்பேற்கும் இறுதிநாள் 2023.01.30 ஆம் திகதியாகும் | |
| அரச வைத்தியசாலையில சேறும்போது | கட்டில்சேர் அட்டை/ நோய் நிர்ணய அட்டை அல்லது சாயன அட்டை டை வெளியில் பெற்றுக்கொண்ட மருந்துகள், பரிசோதனைகளுக்காக வைத்தியரினால் வழங்கப்பட்ட மருந்து அட்டை (பதவி முத்திரையுடன்) கட்டணம் செலுத்தய ரசீதுகளின் முதல் பிரதிகள், தாய்/பாதுகாவலர்/தந்தையின் வங்கி கணக்குகளின் விபரங்கள் |
| தனியார் வைத்தியநசாலைகளில் சேரும்போது மீளப்பெறுதலுககா மட்டும் | உரிமைப்பத்திரம், நோய் விவரிப்பு அட்டை, கட்டணப் பற்றுச்சீட்டு (இறுதி மற்றும் முற்பணம்) விவரிக்கப்பட்ட ரசீதுகளிநந் மூலப்பிரதிகள், தாய்/பாதுகாவலர்/தந்தையின் வங்கி கணக்குகளின் விபரங்கள் |
| வெளிநோய் சிகிச்சைகள் (மூலப்பிரதி) | உரிமைப்பத்திரம், வைத்தியரின் பதவி முத்திரை, திகதி, முகவரிதொலைபேசி எண்ணுடன் கூடிய மருந்துச்சீட்டு, விவரமான பற்றுச்சீட்டுக்கள், பணம் செலுத்தப்பட்ட ரசீதுகளின் மூலப்பிரதி, தாய்/பாதுகாவலர்/தந்தையின் வங்கி கணக்குகளின் விபரங்கள் |

| | |
|---|---|
| தாய் தந்தையோரின் இழப்பு | உரிமைப்பத்திரம், இறப்பு சான்றிதழ், இறப்பு தொடர்பான அறிக்கை(தேவப்படும் நேரத்தில்) தற்காலிக இறப்பு சான்றிதழ், மாணவரின் பிறப்பு சான்றிதழின் பிரதி, மாணவரின் வங்கி விபரங்கள், மரணித்தவரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி குறைந்த வருமானம் பெறுபவர் என பிரதேச செயலாளரின் துணை கையொப்பத்துடன் கூடிய கிராம அலுவலரின் சான்றிதழ் |
| முழுமையான/அரை/தற்கலிக ஊனத்தின்போது | ஊரிமைப்பத்திரம், நோய் விவரிப்பு அட்டை, மருத்துவரின் சான்றிதழ் மற்றும் பரிந்துரை, தாய்/பாதுகாவலர்/தந்தையின் வங்கி கணக்குகளின் விபரங்கள் |
| கடுமையான நோய்களுக்கான நன்மைகளை பெறும்போது<br>நேரடி கொடுப்பனவு<br>மீளப்பெறும்போது | உமைப்பத்திரம், விசேட வைத்திய நிபுணரின் பரிந்துரை கடிதம் மறும் செலவு மதிப்பீடு, நோய் தொடர்பான ஏனைய மருத்துவ சான்றிதழ்கள் பெற்றோர்கள்/பாதுகாவலரின் கோரிக்கை கடிதம், மாணவரின் பிற்ப்பு சான்றிதழ் பிரதி<br><br>உரிமைப்பத்திரம், நோய் விவரிப்பு அட்டை, பணம் செலுத்தப்பட்ட ரசீது(இறுதி மற்றும் முற்பணம்) முழுமையான ரசீதுகளின் மூலப்பிரதிகள், தாய்/பாதுகாவலர்/தந்தையின் வங்கி கணக்குகளின் விபரங்கள், தேவையான ஏனைய ஆவணங்கள், மாணவரின் பிற்ப்பு சான்றிதழ் பிரதி |

### 3.4 பற்றுச்சீட்டு கொடுபப்னவுகள்

3.4.1 **நேரடி கொடுப்பனவு வசதிகள்** – கடுமையான நோயளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்கள் மாத்திரம்

- கண்பார்வை, செவி குறைபாடுகள் தொடர்பான சிகிச்சைகள்
- கண்பார்வை, செவி குறைபாடுகள் தொடர்பான உபகரணங்களை பெற்றுக்கொள்ளல்

### 3.4.1 பற்றுச்சீட்டுகள் மீதான மீள் கொடுப்பனவு

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் பிரதான கிளைக்கோ அல்லது எந்தவொரு கிளை அலுவலகத்திற்கோ உரிமைப்பத்திரம் (இணைப்பு 01) தேவையான ஆவணங்களுடன் சமர்ப்பித்த பின்னர் கொடுப்பனவுகள் செய்யப்படும்.

### 3.5 ஆவணங்களை ஒப்படைத்தல்

- இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் எந்தவொரு கிளை அலுவலகத்திடம் ஒப்படைத்தல்
- இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் பிரதான கிளையிடம் ஒப்படைத்தல் அல்லது பின்வரும் முகவரிக்கு பதிவுத்த தபாலில் அனுப்புதல்

முகாமையாளர்,
"சுரக்ஷா" காப்புறுதி
13 ஆம் மாடி,
இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்,
காப்புறுதி மண்டபம், இல.21,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02

## 4வது அத்தியாயம் - வெவ்வேறு கல்வி நிறுவனங்களுக்குரிய செயற்பாடுகள்

### 4.1 கல்வி அமைச்சு –

- வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக கல்வி செயலாளரின் தலைமைத்துவத்தோடு செயற்குழுவொன்றை அமைத்து இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களம், சுகாதார மற்றும் சுதேச அமைச்சு பிரதிநிதிகளுடன் கூடியதாக இருத்தல்
- இந்த விடயம் சம்பந்தமாக துரித அழைப்பு எண்ணொன்றை ஸ்தாபித்தல், துரித அழைப்பு எண்ணாக 011 278 7979 பாவிக்கப்படுவதுடன் சிக்கல்கள் தோன்றும் தருணங்களில் மற்றும் தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக மு.ப.8.30 மணியளவில் இருந்து பி.ப.4.15 மணிவரை தொடர்பு ஏற்படுத்தி தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.
- மாகாண கல்வி அமைச்சில், மாகாண கல்வித் திணைக்களத்தில், வலய கல்வி அலுவலகத்தில் மற்றும் கோட்ட கல்வி அலுவலகங்களில் வேலைத் திட்டங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களை அறிவுறுத்தல்
- பாடசாலைகளில் மாணவர் தகவல்களை காப்புறுதி நிறுவனங்களுக்கு பெற்றுக்கொடுத்தல் மற்றும் தகவல்களை புதுப்பித்தல்
- காப்புறுதி நன்மைகளை பெற்றுக்கொள்வது குறித்து எழும் பிரச்சினைகளின் போது நடுவராக செயற்படுதல்

### 4.2 மாகாண கல்வி அமைச்சு மற்றும் மாகாண கல்வித் திணைக்களம்

- மாகாண கல்விச் செயலாளரின் தலைமையில் குழுவொன்றை அமைத்தல், மாகாண கல்விப் பணிப்பாளர், சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள், மாகாண சுகாதார செயலாளர் மற்றும் மாகாண சுகாதார அத்தியட்சகர், தமது மாகாணத்திற்குரிய மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர்கள், மாவட்டம் தழுவலாகும் விதத்தில் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தி பிரதிநிதிகள் அதில் உறுப்பினராகுதல
- பாடசாலை வாரத்தில் ஒருமுறை கூட்டங்களை நடாத்துதல் மற்றும் அறிக்கை கோவையொன்றை பராமரித்தல்
- மாகாண கல்வித் திணைக்களத்தில் நிகழ்சிகளை பொறுப்பேற்கும் உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தல்
- மாகாணத்தில் இருக்கும் அனைத்து பாடசாலைகளைச் சார்ந்த மாணவர் தகவல்களை முறையான விதத்தில் உரிய பிரிவுகளுக்கு வழங்குதலைப்பற்றி ஆராய்தல்
- பாடசாலை சமூகம் மற்றும் மக்களை அறிவுறுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்தல்
- மாகாணத்திற்குரிய மாணவர் ஒருவருக்கு காப்பீடுகளை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பாக பிரச்சினைகள் உருவாகும் தருணங்களில் நடுவராக செயற்படுதல்
- காப்புறுதி நிறுவனம் மற்றும் மாகாணத்தில் இருக்கும் கிளைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்தல்
- மாணவர்களின் காப்புறுதி உரிமைகளை கோருதல் மற்றும் இநத உரிமைகளை பெற்றுக்கொள்வது குறித்தான தகவல்களை வலயக் கல்வி பணிமனைகளின் ஊடாக பெற்றுக்கொண்டு தகவல் கோவை ஒன்றினை பராமரித்தல். அத்தகவல்களை ஆறு மாத அறிக்கையாக கல்வி அமைச்சிற்கு இரண்டு தருணங்களில் பெற்றுக்கொடுத்தல். (இணைப்பு 03) மென்மையான மற்றும் கடினமான நகல்களாக)
    - 2021.12.02-2022.05.31 வரையிலான தகவல்கள் 2022.12.15 ஆம் திகதிக்கு முன்னதாக
    - 2022.06.01-2022.12.31 வரையிலான தகவல்கள் 2022.03.31 ஆம் திகதிக்கு முன்னதாக

### 4.3 வலயக் கல்வி அலுவலகம்

- வலயக் கல்விப் பணிப்பாளரின் தலைமையில் குழுவொன்றை ஸ்தாபித்தல், கோட்டத்திற்கு பொறுப்பான பிரதி கல்விப் பணிப்பாளர்/உதவி கல்விப் பணிப்பாளர், வலய கல்வி

அலுவலகத்தைச் சார்ந்த சுகாதார வைத்தியர்கள் உள்ளிட்ட குழுவொன்றை அதன் உறுப்பினர்களாக நியமித்தல்

- பாடசாலை வாரத்திற்கு ஒருமுறை கூட்டங்களை நடாத்துதல் மற்றும் அதற்குறிய கோவை ஒன்றை பராமரித்தல்.
- அனைத்து கல்வி வலயங்களிலும் மாணவர் காப்பீடு நிகழ்ச்சிகளுக்கு பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தல்
- கல்வி வலயத்திற்குச் சொந்தமான பாடசாலை தகவல்களை உரிய நேரத்திற்கு வழங்குவது குறித்து புதிய தகவல்களை புதுப்பிப்பதைக் குறித்து நடவடிக்கை எடுத்தல்.
- கல்வி வலயத்திற்குச் சொந்தமான பாடசாலை தகவல்களை உரிய நேரத்திற்கு வழங்குவது குறித்து புதிய தகவல்களை இற்றைப்படுத்துவது குறித்து நடவடிக்கை எடுத்தல்.
- கல்வி வலயத்திற்கு சொந்தமான பாடசாலை சமூகம் மற்றும் பொது மக்களை அறிவுறுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்தல்.
- காப்புறுதி நன்மைகளை பெற்றுக்கொள்வது தொடர்பாக பிரச்சினைகள் ஏற்படும் தருனத்தில் தமது வலயத்தில் அமைக்கப்பட்டுள்ள காப்புறுதி நிறுவன கிளையொன்றின் பிரதிநிதி ஒருவருடன் இணைந்து பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கு நடுவராக செயற்படுதல்
- மாணவர் காப்புறுதி உரிமைகளை கோரல் மற்றும் அவ்வுரிமைகளை பெற்றுக்கொள்வது குறித்தான தகவல்களை பாடசாலைகள் மூலமாக பெற்றுக்கொண்டு தகவல் கோவை ஒன்றினை பராமரித்தல். அத்தகவல்களை அரை வருட அறிக்கையாக மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு இரண்டு தருணங்களில் வழங்குதல் (இணைப்பு 04) (மென்மையான மற்றும் கடினமான நகல்களாக)
- 2021.12.02-2022.05.31 வரையிலான தகவல்கள் 202211.25 ஆம் திகதிக்கு முன்னதாக
- 2022.06.01-2022.12.01 வரையிலான தகவல்கள் 2023.03.15 ஆம் திகதிக்கு முன்னதாக

4.4 பிரிவெனா/ பாடசாலை

- பிரிவெனாதிபதி, பாடசாலை அதிபரின் தலைமையில் குழுவொன்றை நியமித்தல், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் உறுப்பிணர்கள், பழைய மாணவர் சங்கத்தின் பிரதிநிதிகள், முறைசாரா உத்தியோகத்தர் சங்கத்தின் பிரதிநிதிகள் உள்ளடங்கும் விதத்தில் பாடசாலை தேவைக்கேற்ப உறுப்பிணர் எண்ணிக்கையினை முடிவுசெய்து ஸ்தாபித்தல்
- பாடசாலை வாரத்தில் ஒருமுறை கூட்டங்களை நடாத்துவது மற்றும் அறிக்கை கோவையொன்றை பராமரித்தல்
- காப்புறுதி நன்மைகளை பெற்றுக்கொள்வது குறித்து மாணவர்களுக்கு பிரச்சினைகள் ஏற்படும் தருணங்களில் நடுவராக நின்று செயற்படுதல்
- காப்புறுதி விண்ணப்பப் படிவங்களை முறையான விதத்தில் உறுதிப்படுத்தப்பட்டு காப்புறுதி நிறுவகங்களுக்கு முன்னிலைப்படுத்துவதற்காக பெற்றோர்கள்/பாதுகாலருக்கு வழங்குதல்
- பாடசாலை வாரத்தில் ஒருமுறை கூட்டங்களை நடாத்துவது மற்றும் அறிக்கை கோவையொன்றை பராமரித்தல். (இணைப்பு 02)
- அத்தகவல்களை அரை வருட அறிக்கையாக வலயக் கல்வித் திணைக்களத்திற்கு இரண்டு தருணங்களில் வழங்குதல் (மென்மையான மற்றும் கடினமான நகல்களாக)
  - 2021.12.02-2022.05.31 வரையிலான தகவல்கள் 202211.01 ஆம் திகதிக்கு முன்னதாக
  - 2022.06.01-2022.12.01 வரையிலான தகவல்கள் 2023.02.15 ஆம் திகதிக்கு முன்னதாக

## 5வது அத்தியாயம் - ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை

ஒழுங்கபடுத்தலின்போது எதிர்பாரக்கப்படும் கடமைகள் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வைக்கு ஏற்றதாக பல்தரப்பட்ட நிறுவனங்கள் செயற்பட வேண்டிய விதம், விஷேடமான கவனத்தில் எடுக்க வேண்டிய விடயங்கள், தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் போன்ற விடயங்கள் இவ்வத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன

### 5.1 ஒழுங்குமுறையின் போது எதிர்ப்பார்க்கப்டும் செயற்பாடுகள்

- முறையான விதத்தில் மாணவர் தகவல்களை வழங்குதல்
- பாடசாலை விட்டுச்செல்லும் மாணவர் பற்றிய தகவல்களை உரிய நேரத்தில் வழங்குதல்
- நன்மைகளை பெற்றுக்கொள்வது பற்றிய தகவல்களை பராமரித்தல்
- முறையான விதத்தில் குழுக்கூட்டங்களை நடாத்துதல்.
- காப்பீடு பெற்றுக்கொள்வதற்காக உதவி புரிதல் மற்றும் வழிகாட்டல்

### 5.2 நிறுவனங்கள் செயற்படவேண்டிய விதம்

#### 5.2.1 தேசிய மட்டம்

செயற்றிட்டங்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை, கல்வி அமைச்சின் பாடசாலை சுகாதார மற்றும் போஷாக்கு கிளை மற்றும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் மூலமாக மேற்கொள்ளப்படும். ஏதேனும் பிழைகளை இணங்கண்டால் அல்லது முறைகேடுகள் குறித்து தெரியவந்தால் அது குறித்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் இந் நிறுவனத்திற்கு உள்ளது

#### 5.2.2 மாகாண மட்டம்

மாகாண கல்வி செயலாளர், மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் அவர்களாள் அதிகாரம் வழங்கப்படும் உத்தியோகத்தர்கள் மூலமாக மேற்கொள்ளப்படும்

#### 5.2.3 வலய மட்டம்

வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றம் அவரால் அதிகாரம் வழங்கப்படும் உத்தியோகத்தர்கள், கோட்டத்திற்கு பொறுப்பான பிரதி உதவிக் கல்விப் பணிப்பாளர் மூலமாக காப்பீடு பெற்றுக்கொள்வதற்குரிய விடயங்களை ஒழுங்கு செய்யப்படும்

#### 5.2.4 பாடசாலை மட்டம்

அதிபர் அல்லது அவர் அதிகாரம் வழங்கும் அதிகாரி, ஆகியோர் மூலம் இவ்விடயம் ஒழுங்குபடுத்தப்படும்

### 5.3 விசேட கவனத்திற்கு உள்ளாக வேண்டிய விடயங்கள்

- கொடுப்பனவுகளை வழங்குதற்கு முன்னால் மேலதிக ஆவணங்களை கோருவதற்கோ அல்லது உரிய உரிமங்கள் அல்லது சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான விமர்சனங்களை மேற்கொள்ளும் உரிமை இலங்கை காப்புறுதி கூட்டுததாபனத்தை சார்ந்ததாகும்.
- நன்மைகளை பெறுவதற்கு தகைமைகள் பெறுவது, செலவினங்களுக்குரிய ஆவணங்களின் மூலப்பிரதிகள் அல்லது கோரப்பட்டுள்ள படி ஆவணங்களை சமர்ப்பித்தால் மாத்திரமே.
- பொய்யான உரிமைகளை கோரி நிற்பது உரிமைகளை இழப்பதற்கு காரணமாக அமைவதுடன் காப்பீட்டை முடிவுக்கு கொண்டுவருவதற்கு அல்லது வேறு தகுதியான தண்டனைக்கு உள்ளாக நேரிடுவதை ஒரு காரணியாக கருதப்படும்.
- அனைத்து உரிமைகளும் பற்றுச்சீட்டு திகதியில் இருந்து 03 மாதம் (90 நாட்களுக்குள்) சமர்ப்பிக்க வேண்டியதோடு 2012.12.01 ஆம் திகதிக்கு பின்னர் காப்பீடு காலாவதியாகி 60

நாட்களுக்குள் அதாவது 2023.01.30 ஆம் திகதிக்கு பின்னர் சமர்ப்பிக்கப்படும் பற்றுச்சீட்டுகளுக்கு கொடுப்பனவுகள் வழுங்கப்படாது.

- ஒப்பந்தம் செய்யப்பட்ட கால எல்லை தொடங்கிய 2021.12.02 ஆம் திகதி தொடக்கம் ஏற்பட்ட விடயங்கள் குறித்து பற்றுச்சீட்டுத் திகதி/இறப்பு நடந்த தினம் முதல் 90 நாட்களுக்குள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க தவறிய விண்ணப்பதாரிகள் தொடர்பில் 2022.11.11 ஆம் திகதி வரை விண்ணப்பஙகை சமர்ப்பிப்பதற்கு அவகாசம் வழுங்கப்பட்டுள்ளன.
- நீண்டநாள் சிகிச்சைகளைத் தவிர மருந்துகளை வழங்கிய தினத்திலிருந்து எழு நாட்களுக்குள் மருந்துவ பரிசோதனைகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.
- அனைத்து சிகிச்சைகளும் MBBS அல்லது DAMS அல்லது அதற்கு மேலான தகமைகளைக் கொண்ட வைத்தியர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.
- ஆவணங்களின் மூல பிரதிகளை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பங்களில் மீண்டும் அவற்றை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் உரிய மூல பிரதியின்படி நிழற்பிரதியொன்றை இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன கிளையொன்றில் உறுதிப்படுத்தி பெற்ற பின்னர் மூல பிரதியை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம். ஆயினும் பற்றுச்சீட்டுகளின/ரசீதுகளின் மூல பிரதிகளை மீண்டும் பெற்றுக்கொள்ள முடியாது.

## 5.4 தகவல்களை பெற்றுக்கொள்ளுதல்

I. மேலதிக தகவல்கள் வெப் தளத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்
   - www.srilankainsurance.com
   - www.moe.gov.lk

தொலைபேசி இலக்கம் -

- இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் - 0112-357357 (24 மணிநேரம் சேவை)
- இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் - 0112-319015 (கிழமை நாட்களில் அலுவலக நேரத்தில் மு.ப.8.30 பிப.4.45)
- கல்வி அமைச்சு –0112-787979

Ministry of Education

සුරක්ෂා சுரக்ஷா Suraksha

SLIC Sri Lanka Insurance
Like a father · Like a mother

**සුරක්ෂා හිමිකම් සඳහා තොරතුරු තහවුරු කිරීම (දෙමාපිය මරණ හිමිකමකදී)**
**சுரக்ஷா காப்புறுதிக்கான தகவல் உறுதிப்படுத்தல் படிவம் ( பெற்றோர் மரண காப்புறுதி கோரிக்கையின் போது)**
**Confirmation of Information for Suraksha Claims (for parent death claims)**

පාසල් සංගණන අංකය : ..............................
பாடசாலை கணக்கெடுப்பு இல
School Census No

ශිෂ්‍යය ඇතුළත්වීමේ අංකය : ......................
மாணவர் சேர்விலக்கம்
Student Admission No

ශිෂ්‍යයාගේ නම : ..........................................................................................................
மாணவரின் பெயர்
Student Name

පහත සඳහන් කරුණු ග්‍රාම නිලධාරිතුමා/තුමිය විසින් සම්පූර්ණ කර එවිය යුතුය .
மேலே பெயர் குறிப்பிடப்படுகின்ற மாணவர் தொடர்பாக கீழ்வரும் தகவல்கள் கிராம சேவகர் மூலமாக பூரணப்படுத்தப்பட்டு எமக்கு அனுப்பி அனுப்பி வைக்கப்பட வேண்டியவை
The following details should be filled by the Gramasewa Niladhari.

1.ග්‍රාම නිලධාරී කොට්ඨාශ අංකය : .......................................
கிராம உத்தியோகத்தர் பிரிவு
Name of the Grama Niladhari Division

2. මියගිය අයගේ සම්පූර්ණ නම:..........................................................................................................
மரணமடைந்தவரின் முழுப்பெயர்:
Name of the deceased person

3. මියගිය අයගේ ජාතික හැඳුනුම්පත් අංකය :....................................
மரணமடைந்தவரின் தேசிய அடையாள அட்டை இலக்கம்:
NIC No of the deceased person

4. ලිපිනය:.......................................................................................................................
முகவரி:
Address

5. මියගිය අය නිරත වූ රැකියාව: ..............................................................
மரணமடைந்தவரின் தொழில்:
Occupation of the deceased person

6. මියගිය අය රැකියාව කළ ස්ථානයේ ලිපිනය සහ දුරකතන අංකය : ..........................................................
மரணமடைந்தவரின் தொழில் புரிந்த இடத்தின் முகவரியும் தொலைபேசி இலக்கமும்
Address and telephone number of the employer of the deceased person

7. දැනට පාසල් යන අවු 5 ත් 21ත් අතර ළමුන් ගණන :..........................................
பாடசாலை செல்லும் ( வயது 5 தொடக்கம் 21 வரை) பிள்ளைகளின் எண்ணிக்கை:
Number of school attending children (between age 5 to 21)

8. කලත්‍රයාගේ නම:..............................................................................................................
துணையின் பெயர்:
Name of the spouse

9. කාලත්‍රයාගේ ජාතික හැඳුනුම්පත් අංකය :......................................
துணையின் தேசிய அடையாள அட்டை இலக்கம்
NIC No of the spouse

10. කාලත්‍රයාගේ රැකියාව :.........................................
துணையின் தொழில்:
Occupation of the spouse

11. කාලත්‍රයා රැකියාව කරන ස්ථානයේ ලිපිනය :.........................................
துணை தொழில் புரியும் இடம்:
Address of the employer of the spouse

12. මියගිය අය (හෝ කාලත්‍රයා) විදේශ රැකියාවක නිරත වූයේ නම් (නිරත වේ නම්) ඒ සඳහා පිටත්ව ගිය දිනය :...............
மரணமடைந்தவர் (அல்லது துணை) வெளிநாட்டு ஊழியராக பணி புரிந்தால், அதற்காக புறப்பட்ட திகதி:
If the deceased person (or spouse) employed (employing) overseas, date of departure for same:

13. මියගිය අයගේ පවුලේ දළ මාසික ආදායම ** (රු.) :..................................
மரணமடைந்தவரின் குடும்பத்தின் மாத வருமானம் ** (ரூ):
Gross monthly income of the deceased person family ** (Rs)

14. මියගිය අයගේ පවුලේ දළ වාර්ෂික ආදායම (රු.) : ..............................................( මාසික ආදායම × 12 )
மரணமடைந்தவரின் குடும்பத்தின் வருட வருமானம்(ரூ): ( மாத வருமானம்× 12 )
Gross annual income of the deceased person family (Rs): (monthly income × 12 )

15. මියගිය අයගේ පවුල අඩු ආදායම්ලාභී පවුලක්ද යන වග : ඔව් / නැත : ..........................
மரணமடைந்தவரின் குடும்பமானது குறைந்த வருமானம் பெறும் குடும்பம், ஆம் /இல்லை.
Is the family of the deceased person a low income family : Yes / No

16. අඩු ආදායම්ලාභී පවුලක් බව සනාථ කිරීමට අදාළ වෙනත් ලියවිලි / තොරතුරු:
மரணமடைந்தவரின் குடும்பமானது குறைந்த வருமானம் பெறும் குடும்பம் என்பதனை உறுதிப்படுத்துவதற்குரிய வேறு ஆவணங்கள் / விபரங்கள்:
Other data / information to confirm the low income status
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

ඉහත සඳහන් තොරතුරු සත්‍ය හා නිවැරදි බව සනාථ කරමු
மேலே காணப்படும் தகவல்கள் அனைத்தும் உண்மையானதும் பிழையற்றதும் என உறுதிப்படுத்துக்கிறேன்.
It is confirmed that the above details and information are true and correct.

...............................

ග්‍රාම නිලධාරි
(නිල මුද්‍රාව)
கிராம சேவகர்
(உத்தியோக முத்திரையும் கையொப்பமும்)
Grama Niladhari

.................................

ප්‍රාදේශීය ලේකම්
(නිල මුද්‍රාව)
பிரதேச செயலாளர்
(உத்தியோக முத்திரையும் கையொப்பமும்)
Divisional Secretary

දුරකතන අංකය : .............................
தொலைபேசி இலக்கம்:
Telephone No

** ඉහත අංක 13 ට අදාළ තොරතුරු ලබා දීමේදී මියගිය පුද්ගලයා මිය යාමට ප්‍රථම ලැබූ ආදායම් තත්වයද සලකා තොරතුරු ලබා දිය යුතු අතර මියගිය පුද්ගලයාගේ හා කලත්‍රයාගේ මාසික වැටුප් පත්‍රිකා පිටපත් මේ සමඟ අමුණා එවිය යුතුය.
மேலே 13 இல் கோரப்பட்டுள்ள விடயத்திற்கு தகவல்களை வழங்கும் போது, மரணமடைந்தவரினதும், அவரது துணையினதும் மாத வருமானத்தை கருத்திற் கொண்டே வருமான கணக்கீடு தீர்மானிக்கப்படும். எனவே இருவரினதும் சம்பள விபர தாளின் பிரதிகளை இணைத்து அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்
**When providing information for 13 above, income should be taken by considering income of the spouse and also the deceased person's. Please attached copies of the salary slips of each.**

**වෛද්‍ය ප්‍රතිකාර,රෝහල් ගතවීම් හිමිකම් හා හදිසි අනතුරු අකර්මණ්‍යතා ප්‍රතිලාභ ලබාගැනීම සඳහා පහත ලියකියවිලි ලබාදෙන්න**
தயவுசெய்து மருத்துவ /மருத்துவமனை அனுமதிக்கப்பட்டமை/அங்கவீனம் எனபவற்றிற்கான நஷ்ட ஈட்டை பெற பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்கவும்.

**Please submit following documents for medical, hospitalisation and accidental disability claims:**

- [ ] නිල මුද්‍රාව ඇතුලත් වෛද්‍යවරයාගේ රෝග විනිශ්චය කාඩ්පතේ විදුහල්පතිතුමා විසින් සහතික කළ පිටපතක්
வைத்தியரின் முத்திரையுடன் கூடிய நோய் நிருணய அட்டையின் அதிபரினால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி
Copy of Diagnosis Card with Doctor's seal certified by the principal
- [ ] ගෙවීම් කර ලබාගත් ලදුපත්හි මුල් පිටපත්
கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டுக்களின் மூலப் பிரதிகள்
Original Payment receipts for all payments
- [ ] ලබාගත් ප්‍රතිකාර ඇතුලත්වන විස්තරාත්මක බිල්පත්හි මුල් පිටපත්
பெற்ற சிகிச்சைகள் உள்ளடக்கிய விளக்கமான பற்றுச்சீட்டுகளின் மூலப் பிரதிகள்
Original detail bills
- [ ] වෛද්‍යවරයාගේ නිලමුද්‍රාව සහිත ඖෂධ වට්ටෝරුවේ විදුහල්පතිතුමා විසින් සහතික කළ පිටපතක්
மருத்துவரின் முத்திரை உடனான மருந்துச் சீட்டின் அதிபரினால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி.
Copy of prescription with Doctor's seal certified by the principal

**මරණ හිමිකම් ලබාගැනීම සඳහා පහත ලියකියවිලි ලබාදෙන්න**
இறப்புக்கான நஷ்ட ஈடு கோரலாயின் பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்கவும்
**Please submit following document for death claims:**

- [ ] විදුහල්පතිතුමා විසින් සහතික කරන ලද මරණ සහතිකයේ පිටපතක්
அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட மரண அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி
Copy of the death certificate certified by the Principal (certified copy)
- [ ] ශිෂ්‍යයා/ශිෂ්‍යාවගේ උප්පැන්න සහතිකයේ විදුහල්පතිතුමා විසින් සහතික කළ පිටපතක්
மாணவரின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் பிரதி(அதிபரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டது)
Copy of the birth certificate of the child certified by the principal
- [ ] ආදායම සහතික කරමින් ග්‍රාම නිළධාරී විසින් ලබාදෙන තොරතුරු තහවුරු කිරීමේ ෆෝරමය ( අමුණා ඇත)
குடும்ப வருமானம் விபரங்கள் தொடர்பாக கிராம சேவகர் மூலம் சான்றுபடுத்தப்பட்ட படிவம் ( இணைக்கப்பட்டுள்ளது )
Form of income confirmation certificate of Grama Niladhare ( Attached)

* භාරකරුගේ මරණ හිමිකම් සඳහා භාරකාරීත්වය තහවුරු කිරීමට අදාළ නීත්‍යානුකූල ලියවිලි ඉදිරිපත් කළ යුතුය.
பாதுகாவளரின் அல்லது பொறுப்பாளரின் மரண உரித்துக்கான பொறுப்பேற்றல் கருமங்களை உறுதிசெய்து கொள்வதற்கு, தேவையான சட்டபூர்வமான எழுத்து ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
In the event of a guardian death claim, legal document(s) to prove the guardianship is required.

---

* **ගෙවීම් කල යුතු අයගේ විස්තරය (අදාල එක් අයෙකු වෙනුවෙන් පමණක් සම්පූර්ණ කරන්න)**
**මරණ හිමිකම් සඳහා ශිෂ්‍යයා / ශිෂ්‍යයාවගේ නමින් නිකුත් කරන ලද ගිණුම් සඳහා පමණක් ගෙවීම් සිදුකෙරේ**

**Details of the payee (To be filled in respect of one person only)**
In the event of a death claim, payment will be made only for the student.

**பணத்தை பெறுபவரின் விபரம் (உரிய ஒருவர் மாத்திரம் பூர்த்தி செய்க)**
**மரண கோரலின் போது மாணவ/மாணவரின் பெயர் மற்றும் கணக்கு இலக்கத்துடன் கூடிய வங்கிப்புத்தகத்தின் பிரதி.**

## මව/පියා/ භාරකරු/ ශිෂ්‍ය/ ශිෂ්‍යාවගේ විස්තර — தாய்/தந்தை/பாதுகாவர்/மாணவரின் விபரங்கள் — Details of Mother/Father / Guardian/Student

මව/පියා/භාරකරු/ශිෂ්‍ය/ශිෂ්‍යාවගේ නම:
பெயர் - தாய்/தந்தை பாதுகாவலர்/மாணவரின் :
Name of Father / Mother / Guardian/ Student: ____________________

* භාරකරුගේ විස්තර ඉදිරිපත් කිරීමේදී භාරකාරීත්වය තහවුරු කිරීමට අදාළ ලියවිලි ඉදිරිපත් කළ යුතුය
பாதுகாவலரின் அல்லது பொறுப்பாளரின் பொறுப்பேற்றல் கருமங்களை உறுதி செய்து கொள்வதற்கு தேவையான சட்டபூர்வமான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
Documents to prove the guardianship.

ජාතික හැඳුනුම්පත් අංකය
தேசிய அடையாள அட்டை இலக்கம்
NIC Number

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

ස්ථාවර දුරකථන අංකය நிலையான தொலைபேசி இலக்கம் Land Line ____________________
ජංගම දුරකථන අංකය கையடக்கத் தொலைபேசி இலக்கம் Mobile ____________________
ඊමේල් மின்னஞ்சல் Email ____________________

මුදල් බැර කල යුතු බැංකු ගිණුම් අංකය
நிதியை வைப்பிலிட வேண்டிய வங்கிக் கணக்கு இலக்கம்
Bank Account Number to which funds should be credited

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | |

බැංකුව வங்கி Bank ____________________ බැංකු ශාඛාව கிளை Branch ____________________

* බැංකු පාස් පොතේ ගිණුම් අංකය සහ නම සඳහන් පිටුවේ/බැංකු ගිණුම් ප්‍රකාශයේ පිටපතක් අමුණන්න
வங்கிக் கணக்கு புத்தகத்தில் பெயரையும் கணக்கு இலக்கத்தையும் கொண்ட பக்கத்தின்/வங்கி கணக்கு கூற்றின், பிரதியை இணைக்கவும்
Attach a copy of Bank Account Passbook/ Bank statement with name and account number

ඉහත සඳහන් කරන ලද විස්තර නිවැරදි බවටත් ඉහත හිමිකමට සම්බන්ධ සියලුම විස්තර නොසඟවා ඉදිරිපත් කර ඇති බවටත් මෙමගින් තහවුරු කර සිටිමි/සිටිමු. ඉහතින් ලබා ඇති තොරතුරු සාවද්‍ය නම් අදාල හිමිකම/හිමිකම් බැහැර කිරීමේ අයිතිය ශ්‍රී ලංකා ඉන්ෂුවරන්ස් සතුබව පිළිගනිමි/පිළිගනිමු.

என்னால்/ எங்களால் மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தையும் உண்மையானவை எனவும் இவ்விடையத்தோடு சம்பந்தப்பட்ட அனைத்து தகவல்களும் ஒழிவு மறைவற்ற பூரணமானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன் / உறுதிப்படுத்துகின்றோம். என்னால் எங்களால் வழங்கப்படுள்ள தகவல்கள் எவையேனும் வஞ்சகத் தன்மையானவையாக இருக்குமாயின் நஷ்ட ஈடு வழங்கலை ரத்து செய்யும் உரிமை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு உண்டு என்பதனை ஏற்றுக் கொண்டு கையொப்பம் இடுகின்றேன்/ இடுகின்றோம்.

I/We hereby declare that all above statements and facts are true and that We/I have not withheld from the corporation any material information connected with this claim
I/We agree that if any of the information provided by me/us is false and/or misleading, the corporation reserves the right to repudiate my/ our claim

(1) ..................................................
මව/පියා/ භාරකරුගේ අත්සන
பெற்றோர் /பாதுகாவலர் கையொப்பம்
Signature of the Parent/ Guardian

(2) ..................................................
විදුහල්පතිගේ සහතිකය (නිල මුද්‍රාව සහ අත්සන)
அதிபரின் அத்தாட்சிப்படுத்தல் (உத்தியோக முத்திரையும் கையொப்பமும்)
Certificate by the Principal (With official seal & Signature)

..................................................
දිනය திகதி Date

ඇමුණුම 01

Ministry of Education

සුරක්ෂා

சுரக்ஷா

Suraksha

SLIC Sri Lanka Insurance Corporation Ltd

| කාර්යාලයීය ප්‍රයෝජනය සඳහා அலுவலக உபயோகத்திற்கு மட்டும் Office use | |
|---|---|
| ශිෂ්‍ය රක්ෂණ අංකය மாணவர் காப்புறுதி இலக்கம் Student Insurance No | හිමිකම් අංකය கோரல் இலக்கம் Claim No - |

**විමසීම් සඳහා /for inquiries/ சுரக்ஷா காப்பறுதி தொடர்புகளுக்கு:**

**011 231 9015/ 011 231 9016/ 011 231 9017**

## සුරක්ෂා හිමිකම් පත්‍රය சுரக்ஷா காப்புறுதி நஷ்ட ஈடு கோரல் விண்ணப்பம் Suraksha Claim Form

**සම්පූර්ණයෙන්ම පුරවන්න** தயவு செய்து முழுமையாக பூர்த்தி செய்க **Please complete in full**

ශිෂ්‍ය ඇතුලත්වීමේ අංකය மாணவர் பதிவிலக்கம் Student Admission No

පාසල් සංගණන අංකය பாடசாலை கணக்கெடுப்பு இலக்கம் School Census No

පාසලේ නම பாடசாலையின் பெயர் Name of School

පාසලේ දුරකථන අංකය பாடசாலை தொலைபேசி இலக்கம் School Contact Number

### ශිෂ්‍යයාගේ / ශිෂ්‍යාවගේ විස්තර மாணவரின் விபரம் Student Details

සම්පූර්ණ නම முழுப் பெயர் Name in full

උපන් දිනය பிறந்த திகதி Date of Birth D D M M Y Y Y Y

ස්ත්‍රී/ පුරුෂ භාවය பாலினம் Gender

දිස්ත්‍රික්කය மாவட்டம் District

ස්ථිර ලිපිනය நிரந்தர முகவரி Permanent Address

### හිමිකම් පිළිබඳ විස්තරය காப்புறுதி நஷ்ட ஈடு கோரல் விபரங்கள் Claim Details

**වෛද්‍ය ප්‍රතිකාර සහ රෝහල් ගතවීම් හිමිකම්** மருத்துவ சிகிச்சை /வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை **hospitalisation claims**

රෝහලේ නම වைத்தியசாலையின் பெயர் Name of Hospital

දිස්ත්‍රික්කය மாவட்டம் District

ආබාධය / රෝගය நோய் Ailment / Disease

**අකර්මණ්‍යතා හිමිකම්** அங்கவீனத்திற்கான நஷ்ட ஈடு கோரல் **Disability claims**

අකර්මණ්‍යතාවයට හේතුව அங்கவீனத்திற்கான காரணம் Cause of disability

**මරණ හිමිකම්** இறப்புக்கான நஷ்ட ஈடு கோரல் **Death claims**

මියගිය අයගේ නම இறந்தவரின் பெயர் Name of the deceased

ශිෂ්‍යාට/ශිෂ්‍යාවට ඇති සඥාතීත්වය இறந்தவருடனான உறவு முறை Relationship to the deceased

මව தாய் Mother

පියා தந்தை Father

නීත්‍යානුකූල භාරකරු பாதுகாவலர் Guardian

මරණයට හේතුව மரணத்திற்கான காரணம் Cause of death

මරණය සිදුවූ දිනය இறந்த திகதி Date of Death

මියගිය අයගේ ජා.හැ. අංකය அங்கவீனத்திற்கான நஷ்ட ஈடு கோரல் NIC Number of the deceased

(පිටපතක් අමුණන්න/பிரதியை இணைக்கவும்/ Attach a copy)

## SURAKSHA STUDENT INSURANCE COVER REGISTER OF UNDERTAKING CLAIMS

ANNEXURE 04

## YEAR-2021/2022

ZONE

| Sequential Number | Division | School Census Number | School Name &Address | Email Address | Number of Claim Forms | | | | | | Whether benefits have been received or not | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Medical Treatments and Hospitalization | | | | Inactions | Death Entitlements | | |
| | | | | | Indoor treatments | | Outside Treatments | Critical Deseases | | | | |
| | | | | | Government | Private | | | | | receivd | Not Received |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |

This information should be provided to the Prc the Provincial Education Office as before 30.11.2022 for from 02.12.2021 to 31.05.2022 and before 15.03.2023 for from 01.06.2022 to 01.12.2022as soft & hard copies

ANNEXURE 03

# SURAKSHA STUDENT INSURANCE COVER REGISTER OF UNDERTAKING CLAIMS

## YEAR-2021/2022

PROVINCE

| Sequential Number | Zone | School Census Number | School Name &Address | Email Address | Number of Claim Forms | | | | Inactions | Death Entitlements | Whether benefits have been received or not | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Medical Treatments and Hospitalization | | | | | | | |
| | | | | | Indoor treatments | | | | | | | |
| | | | | | Government | Private | Outside Treatments | Critical Deseases | | | received | Not Received |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |

This information should be provided to the Provinc the Ministry of Education as before 15.12.2022 for from 02.12.2021 to 31.05.2022 and before 31.03.2023 for from 01.06.2022 to 01.12.2022 (as soft & hard copies)

# SURAKSHA STUDENT INSURANCE COVER-CLAIM UNDERTAKING REGISTER

ANNEXURE 02

**year ........**

School

Province Zone

Census Number

Contact Number

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | | | | | | 7 | 8 | 9 | 10 | 11 | | | 12 | 13 | 14 | 15 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Sequential Number | Name | Gender | Enrolement Number of the Student | Grade | Under which catogory benefits have been applied | | | | | | | Date/duration relevant to requesting benifits (For the deseas/death) | Amounts of Benefits requested | Low income /non low income family | Parents/ Guardian's Contact Number | Certification | | | Date of Submissions of claim forms to the Insurer | Signature of the Student and guardian as to confirm the receipt of benifis | Amount Received | Date of Receipt |
| | | | | | Medical Treatments and Hospitalizations | | | | Inactions | Death entitlemets | | | | | | | | | | | | |
| | | | | | Indoor tretments | | Outside Treatments | Critical Deseases | | Mother/ father/Guardian Rs. | Cause of Death | | | | | | | | | | | |
| | | | | | Govt.Hospital | Private Hospital | | | | | | | | | | Teacher's Name | Teacher's Signature | Signature & Date by Principal | | | | |
| | | | | | | | | | | | | | Rs. | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | |

This information can be provided at two occasions as before 15.11.2022 for from 02.12.2021 to 31.05.2022 and before 15.02.2023 for from 01.06.2022 to 01.12.2022 (as soft and hard copies)